இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 19-05-2025

# ஆழம் பார்க்கிறார்கள்!

**ஆ**ளுநர் ரவி, தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு செய்து வரும் அட்டூழியங்கள் குறித்த வழக்கில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் மாண்பமை பார்த்திவாலா, மாண்பமை மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பில், மகத்தான தீர்வைச் சொன்னார்கள்.

சட்டமன்றங்களால் அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களை குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவெடுத்திருக்க வேண்டும் என்று சொன்னது நீதிமன்றம்.

ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு வைத்தது மிகப்பெரிய வெற்றியாகும். அரசியல் சாசனப் பிரிவு 142 இன் கீழ் உச்சநீதிமன்றத்துக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது என்றும், இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருவதாகவும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, **“இது இந்திய மாநிலங்களுக்கு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தால் பெற்றுத்தந்த மாபெரும் விடுதலை”** என்றே சொல்ல வேண்டும்.

இது இங்கிருக்கும் ஆளுநருக்கு மட்டுமல்ல, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் நெருக்கடியைக் கொடுத்த தீர்ப்பு ஆகும். ஆளுநர்கள் மூலமாகத்தான் பாதி குடைச்சலைக் கொடுத்து வருகிறது பா.ஜ.க. தலைமை. எனவே இந்தத் தீர்ப்புக்கு முட்டுக்கட்டை போட நினைத்தார்கள்.

தீர்ப்புக்கு எதிராக ஒன்றிய அரசு சீராய்வு மனு தாக்கல் செய்தால் உரிய பலன் கிடைக்காது என்று நினைத்தார்கள். எனவே, குடியரசுத் தலைவரை விட்டு ஆழம் பார்க்கிறார்கள். குடியரசுத் தலைவர் மூலமாக விளக்கம் கேட்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகி உள்ளது.

கடந்த 15 ஆம் தேதியன்று 14 கேள்விகளைக் கேட்டு உச்சநீதி மன்றத்துக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. அவர் கேட்டுள்ள முக்கியமான கேள்வி என்பது, **“மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க அரசமைப்புச் சட்டத்தில் காலக்கெடு இல்லாத போது நீதிமன்ற உத்தரவுகள் மூலமாக காலக்கெடு விதிக்க முடியுமா?”** என்பதுதான்.

அரசமைப்புச் சட்டத்தில் காலக்கெடு இல்லை என்பது உண்மைதான். அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்ட காலத்தில், **‘ரவி மாதிரியான ஆட்கள் ஒரு காலத்தில் ஆளுநர்களாக வந்து அட்டூழியங்கள் செய்வார்கள்’** என்று கருதி இருக்க மாட்டார்கள். ஆனால் இன்று அது தேவையானதாக இருக்கிறது.

குஜராத் முதலமைச்சராக மோடி இருந்தபோது, அவரால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட ஒரு மசோதாவுக்கு அன்றைய ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருந்த போது மோடி கொந்தளிக்கவில்லையா? அதே கேள்வியைத்தான் இன்றைய முதலமைச்சர் அவர்களும் கேட்டுள்ளார்கள்.

இன்றைக்கு உச்சநீதிமன்றத்தை கேள்வி கேட்கிறார் குடியரசுத் தலைவர். எதை வைத்து காலக்கெடு போடுகிறீர்கள் என்று கேட்கிறார் குடியரசுத் தலைவர்.

கடந்த ஏப்ரல் 8 ஆம் தேதி பார்த்திவாலா - மகாதேவன் அமர்வு அளித்த தீர்ப்பிலேயே அது இருக்கிறது. மசோதாக்கள் மீது ஒப்புதல் வழங்க உச்ச நீதிமன்றம் கால நிர்ணயம் செய்தது ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படிதான். இது அந்த தீர்ப்பிலேயே இருக்கிறது. 2016 ஆம் ஆண்டு ஒன்றிய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட இரண்டு வழிகாட்டுதல் களை ஏற்றுக்கொண்டு இந்த கால நிர்ணயம் செய்வதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

**“2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 நான்காம் தேதி ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஒரு அலுவலகக் குறிப்பை வெளியிட்டுள்ளது. அதில் மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட மசோதாக்கள் மீது மூன்று மாதத்துக்குள் கண்டிப்பாக முடிவு எடுக்க வேண்டும்”** என்பது உள்பட 5 வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மீது மூன்று வாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்றும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதே தேதியில் மாநில அரசுகளுக்கும் அலுவலகக் குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும் மசோதாக்கள் மீது அதிகபட்சமாக மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அமைச்சர்களுக்கு இடையே ஆலோசனை பெற அதிகபட்சமாக ஒரு மாதமும், ஒன்றிய அமைச்சகங்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கு மாநில அரசுகள் ஒருமாதத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி விளக்கம் அளிக்காவிட்டால் அரசு எழுப்பிய சந்தேகத்தை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்வதாக கருதப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“மாநில அரசுகளின் நலனின் அக்கறை கொண்டு மாநில அரசின் சட்டங்கள் மீது காலக்கெடுவுடன் முடிவு எடுக்க அரசு அக்கறை கொண்டிருக்கிறது”** என்று மாநிலங்களுக்கு அனுப்பிய அந்த அலுவலகக் குறிப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு அலுவலகக் குறிப்பையும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் பகிர்ந்துள்ளது. இவற்றை மேற்கோள் காட்டியே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்பது தெளிவாகி யுள்ளது.

**“உள்துறை அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை ஏற்றுக் கொள்வது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். அத்தகைய பரிந்துரை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆளுநரால் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்ட மசோதாக்கள் குறித்து குடியரசுத் தலைவர் முடிவு எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம்”** என்று தீர்ப்பில் மிகத்தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கால நிர்ணயம் செய்வது அரசியல் சாசனம் 201க்கு முரணானது அல்ல. அரசின் அலுவலகக் குறிப்புகள் இரண்டும் அரசியல் சாசனப் பிரிவு 201ன் நோக்கத்துக்கு எதிரானது அல்ல. அதனுடன் ஒத்துப் போகிறது என்பதை வெளிப்படுத்துகிறது”** என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எனவே, குடியரசுத் தலைவர் மூலமாக ஆழம் பார்ப்பவர்கள், முதலில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் ஆழ அகலங்களைப் பார்க்க வேண்டும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.5.2025) சென்னையில் நடைபெற்ற, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் டி. உமாசங்கர் வெண்ணிலா ஆகியோரின் மகன் நவினேஷ் நந்திதா கிருஷ்ணன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்! கொளத்தூர் தொகுதியில்

# கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி!

## பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு – பல்லாயிரவர் கண்டுகளித்தார்கள்!

**சென்னை, மே.19**

**கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை கொளத்தூர் தொகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக அரசு 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5ம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. கழக அரசின் 4 ஆண்டு சாதனைகளை பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாகவும் பொதுமக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழக நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார்.

அந்த வகையில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் ‘நாடு போற்றும் 4 ஆண்டு’ என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம்.காலனியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கண்காட்சியை கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 16ஆம் தேதி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

கழக அரசு கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்திய திட்டங்கள் குறித்த புகைப்படங்கள் கண்காட்சியை அலங்கரித்தன. இந்த கண்காட்சியில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும் வீடியோ பதிவும் இடம் பெற்றது.

அதில்,

‘எனது தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்வி கூடங்களில் காலை உணவுத் திட்டத்தால் குழந்தைகளின் அறிவு உலகை விரிவு செய்துள்ளது. ஆலயங்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி, அன்னை தமிழில் வழிபாடு நடத்தி ஆன்மிக புரட்சி கண்ட அரசு, 2,500க்கும் மேற்பட்ட கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தி ஆன்மிக பண்பாட்டை பாதுகாக்கும் அரசு, புதுமை பெண் திட்டம், தவப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களால் மாணவர்கள் வாழ்வில் வரலாற்று மாற்றங்களை செயல்படுத்திய அரசு.

பெண்கள் சொந்தக் காலில் நிற்க சுழல் நிதி, சிறு-குறுதொழில்முனைவோர்களுக்கு முன்னேற்ற நலன்கள், கடன்கள். இவ்வாறு அபார வளர்ச்சியை, அதிசயத்தக்க வகையில் புதுமைகளைப் படைத்து மக்கள் பாராட்டை பெற்ற ஒரே அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. பெரியார், அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது கனவுகளை நிறைவேற்றும் திராவிட மாடல் அரசின் எண்ணற்ற சாதனைகளில் ஒரு சில சாதனைகளை மட்டும் தற்போது முன் வைத்தேன். மீண்டும் அமைய உள்ள நமது ஆட்சியில் புதிய, புதிய திட்டங்களோடும், அரிய, பெரிய செயல்களோடும் உங்களுடைய ஆதரவோடு தொடர்வேன். உங்களில் ஒருவனாக இருப்பேன். உங்களுக்காக வே உழைப்பேன். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.”

- என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குரல் பதிவு இடம் பெற்றது. 3 டி திரையில் சாதனை விளக்க பாடலும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்த விழாவில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, எம்.பி.க்கள் தயாநிதிமாறன், இரா.கிரி ராஜன், மேயர் பிரியா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபுவின் முன்னெடுப்பிலும் முழு முயற்சி யிலும் மிகுந்த பொருட் செலவில் பிரம்மாண்டமான முறையில் கருத்துக்கும் கண்களுக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியை, நாளொன்றுக்கு, பல்வேறு அமர்வுகளிலும் - 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு களித்தார்கள்.

இவ்வாறு கடந்த 3 நாட்களில் மட்டும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கழக அரசின் இந்தச் சாதனை விளக்கக் கண்காட்சியைக் கண்டு களித்தார்கள்.

**அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார்!**
**அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை பாராட்டினார்!**

இக்கண்காட்சியினை, நேற்று (18.5.2025) மாலை, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும் - பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சருமான எ.வ. வேலு அவர்கள் பார்வையிட்டார்.

கண்காட்சி வடிவமைக்கப்பட்டிருந்த விதம், கண்காட்சியில் இடம் பெற்ற புகைப் படங்கள், கழக அரசின் சாதனை விளக்கங்கள், 3டி ஒலி - ஒளிக் காட்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்களையும் இக்கண்காட்சி எழிலுற அமைக்கப்பட பெரிதும் பாடுபட்ட அமைச்சர் பி.கே.சேகர்பாபுயையும் பெரிதும் பாராட்டினார்.

# மும்பை தி.மு.கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு அறிக்கை!

மும்பை, மே 19 -

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு அறிவித்துள்ளார்.

இது குறித்து மும்பை பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-


மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் கூட்டம் இன்று (19.05.2025 திங்கள் கிழமை) இரவு 7 மணிக்கு தாராவி கலைஞர் மாளிகையில் பொறுப்புக் குழு தலைவர் ம.சேசுராசு எனது தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஜுன் 1-ல் மதுரையில் கழகத் தலைவர் முதல்வர் தலைமையில் நடைபெறும் பொதுக்குழுவில் கலந்து கொள்வது பற்றியும்,

ஜுன் 3-ல் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாள் மும்பையில் சிறப்பாக கொண்டாடுவது பற்றியும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் பற்றியும் பேசி முடிவு எடுக்கப்படும்.

எனவே கிளைக்கழக செயலாளர்கள், பிரதி நிதிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தெரிவித்துள்ளார்.



முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர் மறைந்த ஐயா ஏ.கோவிந்தசாமி அவர்களின் 56 வது நினைவு நாளில் அவரது நினைவு மண்டபத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஏ.ஜி.இளங்கோவன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் தே.முருகவேல் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், காடுவெட்டி ஏழுமலை, என்.என்.இளங்கோ, செ.தினகரன், சித்திக் அலி, பாபுஜீவானந்தம், காசி.விஸ்வநாதன், ரா.சதிஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# முதல்வர் உள்ளங் கையில் - கலைஞரின் உள்ளம் துடிப்பதைப் பார்த்தேன்!

## கவிப்பேரரசு வைரமுத்து நெகிழ்ச்சி!



என்
அன்னையின் மறைவுக்கு
ஆறுதல் கூறிய
முதல் தொலைபேசியே
முதலமைச்சர்தான்;
முதல் இரங்கல் அறிக்கையும்
அவர்தான்!

அந்த ஆறுதல் போதாதென்று
நான் சென்னை வந்ததும்
இல்லம் தேடிவந்து
இருகை பற்றி
இதயம் தடவிக் கொடுத்ததும்
அவர் அன்புதான்!

அவர் உள்ளங்கையில்
கலைஞரின் உள்ளம்
துடிப்பதைப் பார்த்தேன்!

தாயின் மறைவு
எதுகொண்டும் நிரப்பமுடியாத
ஒரு வெற்றிடம்

அதை நிரப்பும் உறவுகளாய்
நாங்கள் இருக்கிறோம் என்று
ஓடிவந்து உணர்த்தியிருக்கிறார்
மாண்புமிகு முதலமைச்சர்!

நன்றி சொல்கிறேன்.

உடன்
அண்ணன் டி.ஆர்.பாலு எம்.பி.
அமைச்சர் சேகர் பாபு
ஆ.ராசா எம்.பி.





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (18–5–2025) பல்லாவரம் அருள் முருகன் திருமண மண்டபத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழு தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். உடன் கழகத் தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரபி அகமத், மண்டல தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, அ.தமிழ் மாறன், மூ.ரஞ்சன், இரா. பொன்ராம், எல்.பிரபு ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பி.கே.ஏ.சத்திய பிரபு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

# அண்ணா அறிவாலய ஊழியர் கே.கார்த்திக் பிரியன் - பெ.தீபிகா மணவிழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்! முதல்வர் இல்லத்தில் இன்று நடைபெறுகின்றது!

சென்னை, மே.19,

சென்னை தேனாம் பேட்டை எம். குப்புசாமி- கே.பூரணி ஆகியோரின் புதல்வரும், சென்னை அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியம் கே.கார்த்திக் பிரியன்-க்கும், நினைவில் வாழும் சி.எம்.பெருமாள் சாமி- நலமுடன் பி.அனிதா ஆகியோரின் புதல்வி பெ. தீபிகா-வுக்கும் மணவிழா இன்று (19.5.2025 -திங்கள் கிழமை) காலை 9 மணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் நடைபெறுகின்றது.



மணவிழாவிற்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழாவிற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து 21.5.2025-புதன்கிழமை அன்று மாலை 6 மணிக்கு சென்னை, தேனாம் பேட்டை கவிஞர் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஐ.இ.டி.கல்லூரி வளாக அரங்கில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இம் மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர் மற்றும் அண்ணா அறிவாலய அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டு மணமக்கள் கே.கார்த்திக் பிரியன்- பெ.தீபிகா ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

### கோவை மாவட்டம் – மருதமலையில்

# 184 அடி உயரமுள்ள முருகன் சிலை அமைக்கப்படும் இடம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, மே.19-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (18.05.2025) கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டதைத் தொடர்ந்து பேரூர், பட்டீசுவரர் சுவாமி திருக்கோயிலில் ரூ. 13.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அன்னதானக் கூடம், பசுமடம், தர்ப்பண மண்டபங்கள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் 184 அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தினையும், சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமைக்கப்படவுள்ள இடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சீர்மிகு ஆட்சியில் திருக்கோயில்களுக்கு குட முழுக்குகள், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், அன்னதானக் கூடங்கள், தர்ப்பண மண்டபங்கள், பசுமட காப்பகங்கள் என அனைத்து பணிகளுக்கும் முக்கியத்துவம் அளித்துநிறைவேற்றப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டம், பேரூர், பட்டீசுவரசுவாமி திருக்கோயிலுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் குடமுழுக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இத்திருக்கோயிலில் தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில் 50 நபர்கள் அமர்ந்து தர்ப்பணம் செய்கின்ற வகையில் ரூ.11.85 கோடி செலவில் மிகப் பெரிய அளவில் தர்ப்பண மண்டபம், சுகாதார வளாகம், காத்திருப்புக் கூடம், தகவல் மையம், படித்துறை சீரமைப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்றவை திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திருக்கோயிலில் ரூ.55 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், ரூ.51 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பசுமடம், ரூ.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கான கழிப்பிட வசதி போன்றவை பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்றைய தினம் 9 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றன. அதில் ஒன்றாக தொண்டாமுத்தூர் மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் 20,000 மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் 2,948 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் திருப்பணிகளுக்கு உபயதாரர் நிதியாக ரூ.1,339 கோடி வரப்பெற்றுள்ளன. இவை திருப்பணிகளுக்கு முறையாக செலவிடப்படுகிறது. அந்த வகையில் பட்டீசுவர சுவாமி திருக்கோயிலின் தர்ப்பண மண்டபம் கட்டுவதற்கு நிதியினை வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இத்துறையின் அமைச்சர் என்ற வகையில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் ஆசியாவிலேயே மிக உயரமாக 184 அடியில் முருகன் சிலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். அந்த சிலை அமைக்கும் பணிக்கான இடத்தினையும், இந்தாண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமையவுள்ள இடத்தினையும் ஆய்வு செய்தோம். வெகுவிரைவில் முருகன் சிலை அமைக்கும் பணிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. கார்த்திக், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் பி. இரமேஷ், மருதமலை அறங்காவலர் குழுத் தலைவர் ஜெயக்குமார், துணை ஆணையர்கள் திருமதி ஆர்.விஜயலட்சுமி, இரா.செந்தில் குமார், உதவி ஆணையர்கள் திருமதி பி. இந்திரா, திருமதி கா. விமலா, யு.எஸ்.கைலாசமூர்த்தி, செயற்பொறியாளர் திருமதி ரேவதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட

# 7 ஊராட்சி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள்!

## ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பெற்று – தீர்வு காண நடவடிக்கை!

சென்னை, மே 19-

தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குட்பட்ட 7 ஊராட்சிகளின் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்றார்.

தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாசியர் தலைமையில், தாம்பரம் வட்டாட்சியர் முன்னிலையில் 16-05-2025 அன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலாம்பாக்கம், சித்தாலப்பாக்கம், மேடவாக்கம், பெரும்பாக்கம் நன்மங்கலம், வேங்கைவாசல், ஒட்டியம்பாக்கம் ஆகிய ஏழு ஊராட்சிகளில் உள்ள பொதுமக்கள் வந்திருந்தனர். அவர்களின் பட்டா கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. பெற்றுக் கொண்டு, அந்த மனுக்களின் மீது தீர்வு விரைவில் தர்வு காண வேண்டுமென அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.





தாம்பரம் சட்டமன்ற தொகுதி திமுக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA 2 ஆலோசனை கூட்டம் பழைய பெருங்களத்தூர் ஸ்ரீ பத்மாவதி கல்யாண மண்டபத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர் ராஜா. எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,கழக பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு தலைவர் டி. ஆர்.பாலு எம் பி, சிறு குழு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர். இதில் தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ வைத்தியலிங்கம்,பரிதி இளம்சுருதி.எம் சி,ஆகியோர் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி,துணை மேயர். கோ காமராஜ்,பகுதி கழக செயலாளர்கள் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன்,எஸ்.சேகர்,இரா.சுரேஷ்,ஆ.நட்ராஜ் ஆகியோரும் மற்றும் கலந்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளில் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள், மகளிர் அணி மற்றும் பாக முகவர்கள் ஆகியோர் பெரும் திரளாக பங்கேற்றனர்.





கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. 2025 – 2026 ஆண்டு சட்டமன்ற தேர்தல் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில், கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் முன்னிலை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் மற்றும் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, தொகுதி பொறுப்பாளர்கள், சுபா.சந்திரசேகரன், தியாக இளையராஜா , செ.புஷ்பராஜ், ஆர்.ரமேஷ் ராஜேந்திரன் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.